ஏர் 10 • உழவு 01 • திருவள்ளுவர் ஆண்டு 2056
விலை ரூ.20/- • ஜனவரி 2025 (மார்கழி - தை)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | : | வீ.க.செல்வக்குமார் |
| துணைத்தலைவர்கள் | : | ஆர்.சண்முகவேல் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | சி.கொங்குவேள் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| V.R.பாலசுப்பிரமணியன் | A.நடராஜன் |
| அருள்பொன்னுசாமி | S.ஜெகநாதன் |
| S.அன்பழகன் | K.நித்தியானந்தன் |
| K.ஜெகதீசன் | விசா M.சண்முகம் |
| S.சீனிவாசன் | S.குணசேகரன் |
| N.P.இசையழகன் | T.P.நடராஜன் |
| R.கந்தகார்த்திக் | D.M.சிவபிரகாசம் |
| G.கதிர்வேல் | பரமேஷ்வரி சின்னசாமி |
| K.G.ஜோதீஷ்குமார் | G.சண்முகப்பிரியா |

தணிக்கையாளர் : ஆர்.பாலசந்திரன்

**Published & Edited by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600 014.

**Printed by** :
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah,
Chennai - 600 014.



மாவீரன் தீரன் சின்னமலை

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலையங்கம்



அன்புடையீர், வணக்கம்!

பொங்கல் திருநாளாம் அது
எங்கள் திருநாளாம்!
தங்கத்தமிழன் அவன்
தன்னிகரற்ற ஒரு நாளாம்!
இயற்கைக்கு நன்றி சொல்வதும்
தமிழன் பண்பாடென
பாருக்கு பறைசாற்றிடும் திருநாளாம்!
உயிர்வாழ உணவுதரும் உழவனுக்கும்
உறுதுணை புரியும் கதிரவனுக்கும்
உழுது உழைக்கும் மாட்டிற்கும்
நன்றி காட்டி கொண்டாடிடும் திருநாளாம்!
தமிழனவன் விருந்தோம்பல் குணமதை
தரணிக்கே கற்றுத்தரும் திருநாளாம்!
உழவும் தொழிலும் செழிப்புற
உறவுகள் வலுப்பெற வையகம்
போற்றிடக் கொண்டாடிடுவோம்
பொங்கல் திருநாளை!!

மேற்கண்ட பொங்கல் வாழ்த்துக்கவிதை ஒன்றை இணையத்தில் கண்டேன். இப்பொழுதெல்லாம் வாழ்த்துகள் அலைபேசியோடு முடிவடைந்து விடுகின்றன. அப்படியே காற்றலையில் அடித்துச் செல்லப்படுகின்றன.

முன்பெல்லாம் பொங்கல் வாழ்த்துக் கவிதைகளை வாழ்த்து அட்டைகளாக வாங்கி உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பார்த்துப் பார்த்து அனுப்புவோம். நமக்கு வரும் வாழ்த்து அட்டைகளையும் எதிர்நோக்கித் தவமிருந்து காத்திருப்போம்.

அப்படி வாழ்த்து அட்டைகளை ஓலைச்சுவடிகளில் "பொங்கல் வாழ்த்து" எனும் பெயரில் அனுப்பி அவ்வழக்கத்தைத் தமிழ்நாட்டில் உருவாக்கிய தலைமகன் யார் தெரியுமா? தூரன் என்ற தனது குலப் பெயரையும் இணைத்துத் தம்மை அழைத்துக் கொண்ட மஞ்சக்காட்டு வலசு பழனிவேலப்ப கவுண்டர் பெரியசாமி தூரன் ஆவார்.

ஆம்! பத்மபூசன் ம.ப.பெரியசாமித்தூரன் அவர்கள் தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் அறிவியக்கத்திற்கு ஆற்றியுள்ள பங்கு ஒப்பிடலுக்கு அப்பாற்பட்டது.

கவிதை நூல்கள், நாடகநூல்கள், கதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுப்புகள், இசை நூல்கள், மொழிப்பெயர்ப்பு நூல்கள் எனப் பல நூல்களும் படைத்து அளித்துள்ளார்கள்.

மகாகவி பாரதியின்பால் ஈர்க்கப்பட்டு மகாத்மா காந்தியின் ஊக்கத்தினால் சிறந்த தேசபக்தரானார்.

"தமிழ் என்றால் தூரன்; தூரன் என்றால் தமிழ்" என்று சொன்னால் அது மிகையாகாது. தூரன் என்ற பெயர் சொன்னாலே அது "கலைக்களஞ்சியம்" என்று சொல்லக்கூடிய தமிழ் என்சைக்ளோபீடியாவைக் குறிக்கும். கடுமையாக உழைத்துப் பத்து தொகுதிகளாக தமிழுலகிற்கு "கலைக் களஞ்சியம்" மட்டுமல்ல சிறுவர் கலைக் களஞ்சியமும் அளித்த கொடை வள்ளல் அவர்.

தைப்பொங்கல் திருநாளாம் தமிழர் திருநாளில், அப்பெருமகனாரின் தமிழ்த் தொண்டை நினைவு கூர்வது நம் கடமையல்லவா?

அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள், திருவள்ளுவராண்டு 2056 நல்வாழ்த்துக்கள்

அன்புடன்,
**வீ.க.செல்வக்குமார்**
தலைவர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்...

பொங்கல் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் இம்மடல் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்!!

டிசம்பர் 14 அன்று நடைபெற்ற மூன்றாவது செயற்குழு கூட்டத்தில் சங்கத்தின் ஆடவர், மகளிர் தங்கும் விடுதிகளான வெள்ளி விழா இல்லம் மற்றும் கொங்குநாடு இல்லத்தில் வசதிகளை மேம்படுத்தும் பல்வேறு பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. Water Dispenser, Washing Machine, Inverter ஆகிய சாதனங்களை அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டிசம்பர் 29 அன்று கோவை செழியனின் 94 வது பிறந்தநாள் சங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.நம் கொங்கு சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் திரைத்துறையிலும் தனி முத்திரை பதித்த ஐயா கோவை செழியன் அவர்களின் உயரிய சேவையை நினைவு கூர்வோம்!!

பத்தாம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தேர்வு எழுத உள்ள நம் மாணவச் செல்வங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!! இந்தியக் குடிமைப் பணி உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் நம் சொந்தங்கள் சங்கத்தின் தங்கும் விடுதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். சங்கத்தில் அமரர் பெரியசாமி தூரன் நூலகம் புது பொலிவுடன் செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,

மகாகவி பாரதியின் பல்வேறு படைப்புகளை கடும் முயற்சி எடுத்து சேகரித்து நம் கைகளில் கிடைக்கச் செய்த பெருமை தூரன் அவர்களைச் சாரும் என்பதை இத்தருணத்தில் நினைவு கூர விரும்புகிறேன்!!

நன்றி!! வணக்கம்!!



அன்புடன்,
**எம்.அமராபதி,** செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்



விடியலில் மென்
பனி நிலவ
ஒளியும் வளியும்
தம் பணி
துவங்கும் போதில்
பசுமையின்
சூழலில் அகலின்
சுடராய்,
நர்த்தகி நுதலில்
தீட்டிய திலகமாய்
பாலகன் கையில்
இனிப்பின்
துளியாய், கார்மேகம்
விடுத்த இளம்
சிவப்பு தூரலாய்
நாள்தனை வரையும்
தூரிகை
நுனியாய் இலங்கும்
இம் முகை
இந்நாளையும் நல்
நாளாக
தீட்டடுமே!
நண்பீர்காள்!

**“வாழி நலம் சூழ !”**

– கலாப்ரியன் (பூபதி)



# இருந்துவிட்டு போவோமே!

- கலாப்ரியன் (பூபதி)

பிறப்பறியா பிறப்பு உதயம்
இறப்பறியா இறுதி பிரிவு
உறவறியா பாசம் கருணை
துறவறியா பற்று பந்தம்.

துயிலறியா இரவுகள் துயரம்
நூலறியா இளமை வறுமை
கயலறியா நீர்பரப்பு மாகடல்
வெயிலறியா நிலபரப்பு அடர்வனம்.

போராடும் களமதில் சமர்
சீராடும் உறவிடம் தாய்மடி
காராடும் நிலைகளம் மலை முகடு
நினைவாடும் கருவூலம் மனவெளி.

உருவமிலா உணர்அருவம் காற்று
திரவநிலை பேராற்றல் பேரலைகள்
திசைகளிலா நிர்மலம் விசும்பு
ஒழிக்க வொண்ணா பெருநெருப்பு ஆசை.

பிறப்பிற்கு முன்பென்ன ?
இறப்பிற்கு பின்னென்ன ?
யாரே அறிவார் பூவுலகில்!
ஓடும் நீரில் தெப்பமென
இருந்து விட்டு போவோமே!



# இயற்கையின் பாதையில்

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

**இயற்கையெனும் பூங்காவில் எத்தனையோ** அதிசயங்கள்! இன்று, இயற்கையை நாம் அழகாக இரசிக்கக் கூடிய நிலையைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது சிறிதே கலக்கமும் நம்மனதுள் பாய்வதை அறியாமல் இருக்க முடியாது. மழை என்பதை இவ்வளவுதான் பெய்யும் என்று கணிக்க முடியவில்லை. “எங்கே ஒரு புயல் மாறி எங்கே திரும்பும் அல்லது சுற்றும் என்பதும் இன்றைய காலகட்டத்தில் அறுதியிட்டுச் சொல்ல முடியாததாகவே இருக்கின்றது.” என்பதை நாம் சமீபத்திய புயல்களில் கண்கூடாகக் கண்டோம். ஆகவே இயற்கை நிகழ்வுகள் தற்பொழுது நிலைமாறி அறிவியற் கண்டுபிடிப்புகளாலும் நிர்ணயம் செய்யமுடியாத நிலைக்கு வந்துவிட்டன. ஆக இயற்கை மகத்தானது;அதை வெல்ல அறிவியலால் முடியாது என்பது திண்ணம்.

## இயற்கையின் உறுதுணையாம் இயற்கை

இயற்கை என்பது இயற்கையாக அழிபடாமல் விட்டு வைக்கப்பட்டுத் தொந்தரவு படாமல் இருந்தால்தான் நாம் இயற்கையோடு ஒன்றி தொந்தரவு இல்லாத நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியும்.

**வெப்ப வேறுபாடுகள்தான் பேய்க்காற்று,** சூறாவளி, அடிக்கடி புயல், மேகவெடிப்பு மழை அல்லது பேய் மழை, போன்றவற்றிற்கு அடிப்படை ஆதாரமாகின்றன. பார்த்திராத வெப்பத்தை நாம், உலக அளவில் வாகனப்புகை, கட்டிடம் மற்றும் சாலைப்பெருக்கம், தொழிற்சாலைப் புகை போன்றவைகளாக இந்தப் பூமிப்பந்திற்குக் கொடுத்துவிட்டு, கொதிக்கும் சூழ்நிலை அளவற்ற தண்ணீரை மழை நீராக ஒரே இடத்தில் கொட்டித்தீர்க்கும் பொழுதுதான், வெள்ளக்காட்டில் கண்ணீர்விட்டு அழுகின்றோம்.

ஆனால் முடிந்தவரை, இயற்கை வேறொரு இயற்கைப் பாதையாலேயே நன்முறையில், தொந்தரவு புகுத்தப்படாத நிலையில் இயற்கையாக வேறுபாடில்லாமல் இயக்கப்பட்டுக்கொண்டிருந்தது. உதாரணமாக, முற்காலத்தில் அதிக ஒளி இல்லாத விளக்குகளை உபயோகித்த காலத்தில் மின்மினிப் பூச்சிகள் இரவில் அதிகமாக வட்டமிட்டன. இங்கு இயற்கைப் பாதையென்பது இருட்டாகும். இரவு இருட்டாகத்தான் இருக்கவேண்டும் என்பது இயற்கை நியதி. ஆனால், நாம் மின்சார விளக்குக்கும் மேலாக

LED விளக்குகளுக்குச் சென்று கும்மிருட்டையும் நாண்பகலாக்கினோம். அங்கே, மின்மினிப் பூச்சிகளைக் காணவில்லை. ஆகவே, எங்குபார்த்தாலும், கொசுத்தொல்லை அபரிதமாகிவிட்டது. ஆகவே, இயற்கைக்கு மற்ற இயற்கைப் பாலங்கள் துணை செய்து வந்தன என்பது உறுதியாகிவிட்டது. இதேபோல் தான், அலைபேசிக் கோபுரங்கள் அதிகமாக அதிகமாக, சிட்டுக்குருவிகள், இல்லாமல் போனதால் வானில் பூச்சி மற்றும் கொசுக்களின் கொண்டாட்டம் அதிகமாகிவிட்டது.

### விவசாயத்தில் இயற்கை :

இன்றைய நவீன கால இராசயாண உரமிட்டுச் செய்யப்படும் விவசாயத்தை நம்பாமல், இயற்கை விவசாயத்தில் பல இளைஞர்கள் இறங்கி இருப்பது மிகவும் பாராட்டத்தக்க முயற்சியாகும். கணினி அறிவியல் துறையில் இருக்கும் சில இளைஞர்களும் அதேமாதிரி, அத்துறையில் கொஞ்சகாலம் இருந்துவிட்டு நிலம் வாங்கி, அதில் இயற்கை இடுபொருளிட்டு, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, முழுவதுமாக இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு பாரம்பரிய நெல் இரகங்கள், மற்றும் தானியங்களைப் பயிரிட்டு நல்ல விளைச்சல் கண்டு வருவதும் கண்டு நாம் மிகவும் பெருமைப்படவேண்டும். நாட்டு இரகங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு அவர்கள் விவாசயம் செய்து காய்கறிகளை உற்பத்தி செய்வதும், விற்பனை நிலையங்களாகத் தங்கள் பண்ணைகளை மாற்றிவருவதும் காண்கின்றோம்.

இயற்கை விவசாயத்தில்....... இயற்கை காட்டும் **ஊக்கிகள்**

### நொதித்த தாவரச்சாறு : (நுண்ணுயிர்ப் பெருக்கத்திற்கு)

இதற்குத் தேவையான, மழை மற்றும் வெயில் இல்லாத நேரத்தில் சேகரிக்கப்பட்ட களைச்செடிகளில் இருந்து பறிக்கப்பட்ட இலை தழைகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி எடைபோட்டு, அந்த எடைக்குச் சமமானநாட்டுச் சர்க்கரையையும் ஒரு மண் பானையில் இட்டு, நன்கு கலக்கி, வேடுகட்டி வைத்து விடவேண்டும். வேடுகட்ட வெள்ளைத் துணியை மட்டும்தான் உபயோகிக்கவேண்டும். மண்பானையை முழுவதும் நிரப்பாமல், கால்வாசி வெற்றிடம் விட்டு நிரப்பி, வேடுகட்டு அப்படியே இரண்டு நாட்களுக்கு வைத்துவிட்டால், மூன்றாம்நாள் நொதித்த தாவரச்சாறு தயார்! இதைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி வீதம் கலந்து தெளிக்கலாம். அத்திரவத்தில் உள்ள நுண்ணுயிர்கள் நிலத்தில் சென்று மண்ணை வளப்படுத்தி பயிர்களின் வளர்ச்சிக்குத் துணை செய்யும். இதை உபயோகித்துத் திட ஊக்கிகளையும் தயார் செய்து நிலத்திற்கு இட்டு வளமாக்கலாம்.

### இயற்கைப் பூச்சி விரட்டிகள் :

### வில்வ இலை, வில்வ எண்ணெய்

வில்வ மரத்துப் பாகங்கள் அனைத்துமே பூச்சிக்கொல்லி ஆற்றலும், காளான் எதிர்ப்புத் தன்மையும் கொண்டவைகளாகும். இலைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் தானியக் கிடங்குகளில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்தும். வில்வப் பட்டையிலிருந்து





எடுக்கப்படும் எண்ணெய் கொசு, ஈ மற்றும் வண்டுகளைக் கட்டுப்படுத்தும். விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் மர இலை உண்ணிகளைக் கட்டுப்படுத்தும் திறன்கொண்டதாகும்.

**சுக்கு அஸ்திரம் :**

சுக்குத் தூளை ஒருலிட்டர் தண்ணீருக்கு நூறு கிராம் வீதம் கலக்கி, காய்ச்சிச் பாதியாயகச் சுண்ட வைத்துப்பின் ஆற வைக்கவும். பின்னர் இரண்டரை லிட்டர் பசும்பால் அல்லது எருமைப்பாலுடன் கலந்து, தாமிரம் இல்லாத பாத்திரத்தில் கொதிக்க வைத்து, ஆடையயை அகற்றி (மேலே படிந்திருப்பது) விட்டுப் பின்னர் ஆறிய பிறகு தண்ணீர் கலந்து வயலில் தெளிக்கலாம். மிகச்சிறந்த பூச்சிவிரட்டி மற்றும் பூஞ்சணக்கொல்லியாகும் இது.

**பச்சை மிளகாய் இஞ்சிக் கரைசல் :**

இஞ்சி, பச்சை மிளகாய் புகையிலைக்கட்டை போன்றவற்றில் ஒவ்வொண்றும் ஒரு கிலோ எடுத்துப் பத்துலிட்டர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைக்கவேண்டும். புகையிலையைத் தனியாக ஐந்து லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைக்கவேண்டும். இரண்டு கலவைகளையும் கலந்து இஞ்சி, பச்சை மிளகாய் கரைசலைத் தயார் செய்யலாம். இந்தக்கலவையை மூன்று விட்டர் எடுத்து நூறு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால் காய், மொக்கு, இலை போன்றவற்றை அழிக்கும் புழுக்களை அழிக்கலாம்.

**ஔடதக் கலவை :**

இது அரைக்கிலோ பெருங்காயத்தை எடுத்து முறையே இரு நூறு கிராம் கடுக்காய், அதிமதுரம், நெல்லிக்காய், தான்றிக்காய் மற்றும் ஜாதிக்காய் ஆகியவற்றை இடித்துப் பொடியாக்கி, ஏழு லிட்டர் தண்ணீரில் ஏழுநாட்கள் ஊறவைத்து, இதன் 300 மில்லி கலவைக்குப் பத்து லிட்டர் தண்ணீர் கலந்து மஞ்சள் நோய்த் தாக்குதலுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம்.

**மூலிகைப் பூச்சிவிரட்டி :**

வேப்பிலை, கற்றாழை, எருக்கன் இலை, நொச்சி இலை ஆகியவற்றில், ஒவ்வொன்றும் ஒரு கிலோ எடுத்து, நன்கு நறுக்கி ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் போட்டு, பசுமாட்டுச் சிறுநீரில் மூன்று நாட்கள் ஊறவைத்துப் பின்னர் அந்தக்கரைசலை ஒரு விட்டருக்குப் பத்து லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம்.

இவ்வாறு மேற்கண்ட இயற்கைப் பொருட்களே நோய் நீக்கும் மருந்தாகவும், பல்லுயிர் பெருக்கத்துக்கும், நுண்ணுயிர்ப் பெருக்கத்துக்கும் பயன்படுகின்றன.

ஆகவே, நோய் நீக்கச்சித்தமருத்துவத்தில் இயற்கை மூலிகைகளும், விவசாயத் துறையிலும், இயற்கைப் பொருட்களும் பயன்படுத்தப்படுவது நமக்கு வியப்பளிப்பதாகும். இம்மாதிரியான இயற்கை மருந்துகள் இன்னும் பல என்ன பயிர் நோய்கள் என்ன இயற்கைப் பொருட்களை உபயோகிக்கலாம் என்று கண்டுபிடித்து உபயோகித்து, இயற்கை விவசாயத்தைப் பெருக்குவோமாக

# திருமண தடை நீக்கும் திருத்தலங்கள்



**நித்ய கால்யாணப் பெருமான்**
ECR சென்னை



**கருமாரியம்மன்**
திருவேற்காடு



**திருமனஞ்சேரி**
மயிலாடுதுறை



**திருப்பரங்குன்றம்**
மதுரை



**உத்திரகோச மங்கை**
ராமநாதபுரம்

நம் சொந்தங்கள் திருமண தடைகளை நீக்க மேற்குறிப்பிட்டுள்ள திருத்தளங்களுக்கு சென்று இறைவழிபாடுகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் மகன், மகளுக்கு திருமண தடை நீங்கி புதுவாழ்வு பெற்றிட வேண்டிக்கொள்கிறோம்.



## கொங்கு உறவுகளே

# உங்களிடமிருந்து துவங்குங்கள்

பெற்றோர்களுக்காக நாங்கள் நடத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளில், கேள்வி நேரத்தில், உங்கள் குழந்தைகளிடம் மாற்றவேண்டியவைகள் என்ன? என்று கேட்டால் பெற்றோர்கள் தரும் பட்டியல் முடிவே இல்லாததாகத்தான் இருக்கும்.

இதை எப்படி மாற்றுவது? அதை எப்படி மாற்றுவது? என்று எல்லா கேள்விகளும் கேட்கப்பட்டவுடன் நான் சொல்வது, “உங்களிடம் துவங்குங்கள்.”

மிஸ்டர், குமாரசாமி, ஜெராக்ஸ் எடுப்பதற்காக கடைக்குச் சென்றார். தன் பயோ-டேட்டாவை ஜெராக்ஸ் எடுத்தவர் ஜெராக்ஸில் புரூப் பார்த்தார். அருகில் இருந்தவர் ஆச்சரியத்துடன் என்ன செய்கிறீர்கள்? என்றார். நீங்கள் புரூப் பார்க்க வேண்டியது ஜெராக்ஸை அல்ல ஒரிஜினலை.

குழந்தைகளை திருத்த வேண்டும் என்று நினைக்கிற எல்லோருக்கும் முதல் படிப்பினை இதுதான். குழந்தைகள் உங்கள் ஜெராக்ஸ், நீங்கள் ஒரிஜினல் எனில் எதில் புரூப் பார்ப்பீர்கள்.

படிக்கவே மாட்டேங்கிறான், எல்லாத்துக்கும் கோபப்படறான். யார்கிட்டவும் பழக மாட்டேங்கிறான் என குழந்தைகளிடம் எதில் நீங்கள் மாற்றம் ஏற்படுத்த விரும்பினாலும் அந்த மாற்றத்தின் துவக்கப்புள்ளி பொற்றோர்களாகிய நீங்கள்தான்.

எல்லா பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளிடம் என்ன மாற்றங்கள் கொண்டுவர வேண்டும்? அவன் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டும் அவன் முன்னேற்றத்திற்கு என்ன செய்ய வேண்டும்? என்று சதா சர்வ காலமும் யோசிக்கிறார்கள். அதற்கு முதலில் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து சில மாற்றங்களை செய்து கொள்ள வேண்டும் என்பதை உணர்வதில்லை.

இஸ்லாத்தில் தூய்மை செய்வது பற்றிய குறிப்பு ஒன்றில் இப்படி வரும். உங்கள் வலது கையால் இடது கையை சுத்தம் செய்யுங்கள். இடது கையால் வலது கையை சுத்தம் செய்யுங்கள். பிறகு இரண்டு கைகளாலும் முகத்தை சுத்தம் செய்யுங்கள்.

இதில் இரண்டு கைகள் என்பது கணவனும் மனைவியும், முகம் என்பது குழந்தைகள். எனவே, உங்கள் குழந்தைகளை தூய்மைப்படுத்தவதற்கு முதலில் நீங்கள் ஒ ரு வ ரு க் கொ ரு வ ர் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கான நிகழ்ச்சியில், பெற்றோர்களிடம் உள்ள எந்த நல்ல குணம் உங்களிடம் உள்ளது? எதை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டுள்ளீர்கள்? என்று கேட்போம். மாணவர்கள் சொல்லும் பதில்களை பெற்றோர்கள் பெருமை பொங்க கேட்பார்கள்.

பிறகு பெற்றோருக்கு என்று நடக்கும் தனி நிகழ்ச்சியில் உங்களிடம் உள்ள எந்தத் தவறான விஷயத்தை உங்கள் குழந்தைகளும் பின்பற்றுகிறார்கள் என்று கேட்போம். சங்கடத்தோடு பல பதில்கள் வரும். பெரும்பாலானவை கோபத்தை பின்பற்றுகிறார்கள் என்பதாகத்தான் இருக்கும். அப்போது பெற்றோர்களுக்கே புரிந்திருக்கும். இப்பொழுது நம் குழந்தைகளிடம் தாய் தந்தை இருவரின் தன்மையும் இருக்கும்.

உங்கள் குழந்தையிடம் கோபப்படும் தன்மை இருந்தால் அது உங்களிடமிருந்துதான் தோன்றியிருக்கும். எனவே அதை மாற்றவேண்டுமென்றால் உங்களிடமிருந்து துவங்குங்கள். கோபம் தவறென்று நீங்கள் நினைத்தால் முதலில் நீங்கள் கோபப்படாமல் நடந்து கொள்ளுங்கள் விரைவில் குழந்தைகளும் அதைப் பின்பற்றுவார்கள்.

துணி வாங்கி சட்டை தைப்பதற்காக டைலரிடம் கொடுக்கிறீர்கள். சட்டை உங்களுக்கு பொருத்தமான அளவில் இல்லை. யார் தவறு டைலரின் தவறா? துணியின் தவறா?

மரம் வாங்கி ஆசாரியிடம் தந்து மேஜை செய்யச் சொல்கிறீர்கள். மேஜை சரியாக வரவில்லை எனில் அது மரத்தின் குற்றமா? ஆசாரியின் குற்றமா?

அதுபோலத்தான் உங்கள் குழந்தைகள்



இப்போது சரியாக இல்லை என்று நீங்கள் நினைத்தால் அதற்கு நீங்கள் தான் பொறுப்பு.

இப்பொழுது இருக்கும் நிலைக்கு நீங்கள்தான் பொறுப்பு என்கிறபோது மாற்றம் உங்களிடம்தானே வேண்டும்.

முதலில் உங்களை மாற்றிக்கொண்டால் மட்டுமே உங்கள் வார்த்தைகள் கவனிக்கப்படும், கடைப்பிடிக்கப்படும். எனவே நம்மை மாற்றிக்கொண்டு நம் குழந்தைகளிடமும் மாற்றங்களை எப்படி கொண்டு வருவதென்று பார்ப்போம்.

குழந்தைகளுக்கு தவழ, நடக்க என்று எல்லாவற்றிற்கும் 'தவழ், எழுந்து நட' என்று கட்டளைகள் கொடுத்தீர்களா? ஏன்? மற்றவர்கள் நடப்பதைப் பார்த்து உந்துதல் பெற்று அவர்களாக நடக்கக் கற்றுக் கொண்டார்கள் இல்லையா? அதுபோலத்தான் உங்களைப் பார்த்து அவர்கள் அடையும் உந்துதல் தான் அவர்களை வழிநடத்த வேண்டும்.

3 குழந்தைகள் தங்கள் அப்பாவை பற்றி பெருமையாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதல் பையன் சொன்னான், எங்கள் அப்பா அம்பு மாதிரி 4 மணிக்கு ஆபிஸ் விட்டா 4.30க்கு வீட்டிற்கு வந்துவிடுவார். இரண்டாவது பையன் இன்னும் பெருமையாக சொன்னான் எங்க அப்பா 4 மணிக்கு ஆபிஸ் விட்டா 4.03க்கு

கெல்லாம் வீட்டில் இருப்பாரு. 3வது பையன் ரொம்ப பெருமையாக சொன்னான். எங்க அப்பா 4 மணிக்கு ஆபிஸ் விட்டா 3.30க்கெல்லாம் வீட்டில் இருப்பாரு. இப்படி இருக்கிற அப்பா எதில் மாற்றம் ஏற்படுத்த முடியும்?

உங்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடிகிறதா என்று பாருங்கள். உங்களையே உங்களால் மாற்ற முடியவில்லை என்றால் மற்றவர்களை மாற்றமுடியயுமா என்ன?

உங்கள் குழந்தைகள் எதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதை முதலில் நீங்கள் கடைப்பிடியுங்கள்.

**உதாரணத்திற்கு ஒன்று,**

பள்ளிகள் திறந்தாகி விட்டது. குழந்தைகளை படிக்க உட்கார வைப்பதே இனி பெரிய வேலையாக இருக்கும். பெற்றோர்களுக்கு, படிக்கிற விஷயத்தில் சுயஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த மாற்றத்தை அவர்களிடம் கொண்டு வர உங்களிடம் துவங்குங்கள்.

**நீங்களும் படியுங்கள் :**

அவர்கள் படிக்க வேண்டிய நேரம் வந்ததும் படி என்று சொல்லாமல் நீங்களும் படியுங்கள்

என்னது நானா? என்று அதிர்ச்சி அடையாதீர்கள், நீங்களேதான்.

ஒரு மனிதர் புகழ்பெற்ற குருவிடம் வாழ்த்து பெற வேண்டி வந்திருந்தார். குரு அவர் குடும்பத்தை பற்றி கேட்டார். அதற்கு அந்த மனிதர் நான் படிச்சு முடிச்சிட்டு ஒரு கம்பெனியில் 40 வருஷம் வேலை பார்த்து இப்பதான் ரிட்டையர் ஆனேன். என் மனைவி படிச்சு முடிச்சிட்டு வீட்லதான் இருக்காங்க. என் பையன் படிச்சு முடிச்சிட்டு வெளிநாட்டுல வேலை கிடைச்சு அங்கேயே செட்டில் ஆயிட்டான் என்றார். குரு உடனே சொன்னார். உங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை ஏனென்றால் உங்கள் வீட்டில் எல்லோரும் படிப்பை முடித்து வீட்டீர்கள்.

பலரும் இங்கே கல்வி என்பது பள்ளிக்கு செல்ல ஆரம்பித்ததில் துவங்கி டிகிரி வாங்கியதும் முடிந்து விடுகிறது என்றே நினைக்கிறார்கள். முக்கியமாக வேலை கிடைத்துவிட்டால் படிப்பது என்பதே அவசியமற்றதாக உணரப்படுகிறது.

ஓர் ஆசிரியர் தன் பள்ளியில் கல்லூரியில் படித்த பாடங்களிலிருந்து மட்டும் பாடம் நடத்திக்கொண்டிருந்தால், ஒரு போதும் சிறந்த மாணவனை உருவாக்க முடியாது. அவர்கள் பாடம் எடுக்கும் துறையில் சமீபத்திய புத்தகங்கள் வரை கற்றுத்தேர்ந்திருந்தால்தான் ஓர் ஆசிரியராக விளங்க முடியும்.

ஒரு மருத்துவர் சிறந்த மருத்துவப்பட்டம் பெற்ற ஒரு தகுதி மட்டும் போதாது. தொடர்ந்து தங்கள் துறையில் வருகிற மருத்துவமுறை மாற்றங்கள். புதிய மருந்துகள் இவற்றை பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் அப்போதுதான் சரியான முறையில் நோயாளிகளை கையாள முடியும் நோய்களை குணப்படுத்த முடியும்.

ஒரு வகையில் ஆசிரியரை விடவும் மருத்துவரை விடவும் அதிக பொறுப்புள்ள பெற்றோர்கள் தொடர்ந்து கற்றுக் கொள்கிறார்களா என்றால் அது கேள்விக்குறிதான்.

எனவே நீங்கள் உங்களுக்கு ஆர்வமுள்ள துறைகள் அல்லது குழந்தை வளர்ப்பு போன்றவற்றை தெரிந்து கொள்ள வேண்டிய புத்தகங்களை குழந்தைகள் படிக்க வேண்டிய நேரத்தில் உட்கார்ந்து படியுங்கள். நீங்கள் சொல்லாமலே அவர்களும் உங்களோடு உட்கார்ந்து படிக்க ஆரம்பிப்பார்கள்.

மாற்றங்களை உங்களிடம் துவங்குங்கள், உங்கள் குழந்தைகள் அதை தொடர்வார்கள்.

இதுதான் நீங்கள் வீட்டிற்குள் பெறவேண்டிய வெற்றி.

– கிருஷ்ணன் வரதராஜன்

# சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் 35ஆம் ஆண்டு விழாவின் சிறப்பு காட்சிகள்



















# விடுதலைக்கு விதை தூவிய வித்தகர்

எனக்கு அறிவுப் பாலூட்டும் அன்னையாய், எனது கொள்கைக்கெல்லாம் ஆதாரமாய், என்பின்புறத்தே நின்றுகொண்டு, எனது ஜீவிதத்துக்கு ஒரு தூண்டுகோலாய் என்றும் அவர் இருந்து வருகிறார். அவர் சக்தி இருந்து வருகிறது; விவேகானந்தரின் கடிதங்களில் தேசாபிமானம் ததும்புகிறது; பாரத உணர்ச்சி பொங்குகிறது; இந்திய ரத்தம் துடிக்கிறது நமது தாய்நாட்டின் ஜெயகோஷம் முழங்குகிறது" என்று உணர்ச்சி பொங்கத் தமது நூல்களுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார், தமிழகத்தின் விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரான சுப்பிரமணிய சிவா.

பாரதியார் தனது இந்தியா இதழில் எழுதிய ஒரு தலையங்கத்தில் பரம ஞானியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் மஹாபாரதப் போரிலே பாண்டவர்களுக்கு வழிகாட்டியது போலவும், சர்வ பந்தங்களையும் துறந்த ராமதாஸ்முனிவர், மகாராஜா சிவாஜிக்கு ராஜ தந்திரங்களைச் சொல்லி வெற்றி கொடுத்தது போலவும், தற்காலத்தில் அநேகத் துறவிகள் நமது சுதேசிய முயற்சியிலேயே சேர்ந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற விவேகானந்த பரமஹம்ச மூர்த்தியே இந்த சுயாதீனக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவர் என்பதை உலகம் அறியும் என்று எழுதியுள்ளார்.

1893–ல் சென்னை திருவல்லிக்கேணியில் பாலாஜிராவ் என்ற தனது சீடரின் இல்லத்தில் விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவு குறித்து பாலாஜிராவின் புதல்வர் ரகுநாதராவ் நினைவுகூர்ந்து எழுதியுள்ளார். அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மற்றும் பல வழிகளிலும் இந்தியா சீர்குலைந்து போய் இருந்தாலும், அந்நியர்களையும் அந்நிய ஆட்சியையும் எதிர்த்துக் கிளர்ந்தெழக் காலம் கடந்து விடவில்லை.

குறுகிய மனப்போக்குகளும் பொறாமை உணர்வுகளும், வகுப்பு வாதமும் இன்று நாட்டைப் பிளவுபடுத்தியிருந்தாலும், இந்தியா விரைவில் புத்தெழுச்சி பெற்று விடுதலை பெறப்போகிறது என்று உணர்ச்சிகரமாக தனது உரத்த குரலில் கம்பீரமாக விவேகானந்தர் முழங்கியதாக ரகுநாதராவ் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு ஆழமான அரசியல் கருத்தை வெளியிட்டபோது விவேகானந்தருக்கு வயது 30 மட்டுமே. சாதாரணப் பொருளில் அவரை அரசியல்வாதி என்று சொல்ல முடியாவிட்டாலும் தற்கால தேசிய இயக்கத்தின் சாரதிகளில் ஒருவராக அவரை நான் கருதுகிறேன். மாபெரும் அந்த இயக்கத்தில் தீவிரமாய்ப் பங்கேற்ற பலரும் அவரால் தூண்டப்

பெற்றவர்களே. அவரது செல்வாக்கு இன்றைய பாரதத்தை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கவர்ந்துள்ளது என்று நேதாஜி கூறியுள்ளார்.

நேதாஜி முழுக்க முழுக்க விவேகானந்தரின் தாக்கத்தால் உருவானவர் என்று வரலாற்று ஆய்வாளர்கள் அனைவருமே ஒருமுகமாகக் குறிப்பிடுகின்றனர். இன்னும் ஒரு படி மேலேபோய் நேதாஜி முழுமையாகத் தன்னை ஆன்மிகத்தில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தால் அவர் விவேகானந்தரைப்போல் இருந்திருப்பார். விவேகானந்தர் நேரடி அரசியலில் களமிறங்கியிருந்தால் அவர் நேதாஜியைப்போல் விளங்கியிருப்பார் என்றும் சில ஆய்வறிஞர்கள் வரையறுத்துக் கூறகின்றனர்.

ஈசன் அருளாலும், நம்மவர் அதிர்ஷ்டத்தாலும் மற்றெல்லாப் பற்றையும் துறந்த அவர், நாட்டுப்பற்றை மட்டிலும் நெடுங்காலம் கொண்டிருந்தார். ஆனால், பரம சன்னியாசியைத்தவிர மற்றவர்கள் அனைவரும் பூமிப்பற்று இல்லாத விஷயத்தில் பிணங்களுக்குச் சமமானவர்கள் என்பதை இம் மகரிஷி மிகவும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார் என்று பாரதியார், விவேகானந்தரின் நாட்டுப்பற்றை வியந்து பாராட்டுகிறார்.

வீரர்களாயிருங்கள்; பூமியை அனுபவியுங்கள்; கண்டவர்களெல்லாம் காலால் மிதித்தும், காறியுமிழ்ந்தும் அவமானப்படுத்துகிற இந்தப் பேடி வாழ்க்கையை எத்தனை காலம் வாழப் போகிறீர்கள்? இதுவும் ஒரு வாழ்க்கையா? என்று மகா ஆத்திரத்துடன் இந்தியர்களிடம் விவேகானந்தர் எழுப்பிய கேள்வியைப் பாரதியார் தனது கட்டுரை மூலம் நமக்கு நினைவுபடுத்துகிறார்.

விவேகானந்தரின் வரலாற்றை ஆய்வு செய்வதில் ஒரு வேள்வியே மேற்கொண்ட மேலைநாட்டு வரலாற்று அறிஞர் ரோமன் ரோலண்ட், இந்திய விடுதலைப் போராட்டத்தில் விவேகானந்தரின் தாக்கத்தையும் ஆய்வுசெய்து நீறு பூத்த நெருப்பாய் இருந்த தேசிய இயக்கத்தை விவேகானந்தர் ஊதிவிட்டது, தீக் கொழுந்துகளுடன் எரியத் தொடங்கி அவரது மறைவுக்கு மூன்றாண்டுகளுக்குப் பிறகு 1905–ல் வீறுடன் வெடித்தெழுந்தது என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

1905 வங்கப் பிரிவினையும் அதன்பொருட்டு எழுந்த மாபெரும் ஆங்கிலேயச் சூழ்ச்சிக்கு எதிரான மக்கள் எழுச்சியும் தான் இந்தியவிடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. இப்போராட்டத்தையொட்டித்தான் சுதேசி இயக்கமும் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் மும்மூர்த்திகள் என்று அழைக்கப்பெற்ற திலகர், விபின் சந்திரபாலர், லாலா லஜபதிராய் ஆகிய மூவரிடத்திலும், இதேபோன்று தமிழகத்தின் தொடக்ககால முப்பெரும் போராளிகளாக விளங்கிய வ.உ.சி., பாரதியார், சுப்பிரமணிய சிவா ஆகிய மூவரிடத்திலும் விவேகானந்தரின் தாக்கத்தை வெகுவாக உணர முடிகிறது.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்கள் விவேகானந்தர் தொடங்கி மொத்தம் பதினாறு பேர். அவர்களுள் ஒருவரான இராமகிருஷ்ணானந்தரை, சுவாமி விவேகானந்தர் சென்னையில் இராமகிருஷ்ண மடத்தை நிறுவ 1897–ல் அனுப்பிவைத்தார். இந்த இராமகிருஷ்ணானந்தரைத்தான் பின்னொரு சமயம் வ.உ.சி. சென்னையில் சந்தித்துள்ளார். இவரைச் சந்தித்து உரையாடிய பின்னர் கிடைக்கப்பெற்ற புதிய வெளிச்சத்தில்தான் தனது அரசியல் செயல்பாடுகள் விரிவடைந்ததாக வ.உ.சி.யே தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

தனது சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதியுள்ள வ.உ.சி. இராமகிருஷ்ணானந்தரைச் சந்தித்தது பற்றிக்

கூறுகையில் – "சுதேசியம் ஒன்றே சுகம் பல அளிக்கும். இதே என் கடைப்பிடி என்றனன், அவனுரை வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம் சித்தம் அதனைச் சிதையாது வைத்தது" – என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிறிதொரு சமயம், இராமகிருஷ்ணர் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு முக்கிய பிரமுகர்கள் ஜப்பான் செல்கிறபோது, தூத்துக்குடியில் அவர்களை வரவேற்று விருந்தளித்து அவர்களிடம் நெடுநேரம் உரையாடிப் பயனடைந்ததாக வ.உ.சி. கூறியுள்ளார்.

இராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவராக விளங்கியவர் பிரம்மானந்தர். அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்து பத்தாண்டுகள் தங்கியிருந்து அங்கு சொற்பொழிவுகள் மூலமாக அமைப்புகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர் சுவாமி அபேதானந்தர். இவர்கள் இருவரையும் சந்தித்து உரையாடி மேலும் தேசம் குறித்த புதிய சிந்தனைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டதாக வ.உ.சி. எழுதியுள்ளார்.

இதேபோன்று பாரதியும் 1908–ல் வெளியிட்ட தனது முதல் நூலான "ஸ்வதேச கீதங்கள்' எனும் நூலில் ஸமர்ப்பணம் எனும் தலைப்பில் ..." எனக்கும் பாரததேவியின் சம்பூர்ணரூபத்தைக் காட்டி, ஸ்வதேசபக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கிறேன்' என்று அச்சிட்டுள்ளார்.

பாரதி தனது குருவாக விவேகானந்தரின் தலைமைச்சீடர்களில் ஒருவராக விளங்கிய சகோதரி நிவேதிதாவை ஏற்றுப் போற்றுகிறார். நிவேதிதாவுக்கே தனது முதல் நூலை பாரதி சமர்ப்பித்துள்ளார் என்பது மிகவும் கவனிக்கத்தக்கதாகும். விவேகானந்தரைப் பற்றியும் சகோதரி நிவேதிதா குறித்தும் தனது இந்தியா' இதழில் பலமுறை விரிவாக எழுதியுள்ளார் பாரதியார்.

தேசபக்தர்கள் இருவகைப்படுவர்; ஒருவகை, அரங்கத்திலாடுவது. மற்றொருவகை திரைக்குப் பின்னேயிருந்து புகழறியாமல் பாடுபடுவது. இவற்றுள் முன்னதிலும், பின்னது சிறந்ததாகக் கூறலாமேயல்லாது குறைந்ததாகக் கருதத்தக்கதன்று. காலஞ்சென்ற ஸ்ரீஅழகிய சிங்கப்பெருமாள் பின் வகுப்பைச் சேர்ந்திருந்தவர் என்று 1909–ம் ஆண்டு அழகிய சிங்கப்பெருமாளின் மறைவையொட்டி இந்தியா இதழில் எழுதிய இரங்கல் கட்டுரையில் குறிப்பிடுகிறார் பாரதியார்.

நமது தேசபக்தி முயற்சிக்குத் தாய் முயற்சியாகிய ஸ்வாமி விவேகானந்தரது வேதாந்தப் பிரசாரத்தில் அழகிய சிங்கப்பெருமாள் அளவிளந்த சிரத்தைப் பாராட்டியவர் என்றும் பாரதியார் எழுதியுள்ளார்.

விவேகானந்தர் எழுதிய கடிதங்களில் பெரும் எண்ணிக்கையிலானவை அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதியவையேயாகும். விவேகானந்தர் தனக்கு மிகவும் நெருக்கமானவராக விளங்கிய அழகிய சிங்கப்பெருமாளைத் தனது சென்னைச் செயலர் என்று அவரே குறிப்பிடும் அளவுக்கு அணுக்கமாகத் திகழ்ந்தவர்.

பாரதியாரால் அழகிய சிங்கப்பெருமாள் குறித்துச் சொல்லப்பட்ட கருத்து அவரின் குருவாகத் திகழும் விவேகானந்தருக்கும் முழுமையாகப் பொருந்தும்.

ஹிந்து, சுதேசமித்திரன் போன்ற இதழ்களைத் தொடங்கி தேசபக்தக் கருத்துகளைப் பரப்பிய, காங்கிரஸ் கட்சியின் தொடக்க மாநாட்டிலேயே தமிழகத்தின் சார்பில் பங்கேற்று முதல் தீர்மானத்தை முன்மொழிந்த ஜி.சுப்பிரமணிய ஐயர் விவேகானந்தரின் சொற்பொழிவுகளை

சென்னையில் நேரில் கேட்டுப் பரவசமடைந்தவர்.

எதிர்கால இந்தியா என்ற தலைப்பில் வீரவுரை நிகழ்த்திய விவேகானந்தர் அடுத்து, “ஐம்பது ஆண்டுகளுக்கு இந்த மகத்தான தாய்நாட்டைப் பற்றியே நாம் நினைக்க வேண்டும். அதுவொன்றே நமது தேசிய வாழ்க்கையின் சிறப்பான குறிக்கோளாகும். இக்காலத்தில் மற்றெல்லா தெய்வங்களும் நம் மனத்தை விட்டு அகலட்டும்.

நமது தேசம், நமது மக்கள் இவைகள்தான் உயிருள்ள தெய்வங்கள். இத்தெய்வத்தின் கைகளும், கால்களும், சமூகமும் நாடு முழுவதும் எங்கும் பரவியிருக்கின்றன. மற்ற தெய்வங்கள் அனைத்தும் இப்பொழுது உறங்கிக்கொண்டிருக்கின்றன. நம்மைச் சுற்றிலும் பரவி, எங்கும் திகழ்ந்து கொண்டிருக்கும் இவ்விராட புருஷனை வழிபடுவதை விடுத்து நாம் வேறு தெய்வங்களை நாடிச்செல்ல வேண்டுமா? இந்தத் தெய்வத்தை நாம் முதலில் வழிபடுவோமாக” என்று வீர ஆவேசமாக முழங்கினார். விவேகானந்தர் குறிப்பிட்டது போலவே ஐம்பது ஆண்டுகள் கழித்து நாடு விடுதலை பெற்றது.

வீரத்துறவி விவேகானந்தர் 1893–லேயே “வரலாறு கண்ட வஞ்சம்’ என்ற தலைப்பில் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த உரையின் சில வரிகளை நாம் என்றென்றும் மறக்கலாகாது.” தேசபக்தி என்பது அந்நியர்கள் கொடுமைகளில் இருந்து விடுதலை பெறுவதைக் குறிப்பதோடு நம்மவர்கள் கொடுமைகளில் இருந்து விடுதலை பெறுவதையும் குறிப்பதாகும்” என்ற வரி நெஞ்சில் நிலைக்கத்தக்க வரிகளில் வைரவரியாகும்.



தனது ஆன்மிக, ஆவேச உரைகளால் பாமரனுக்கும் தேசப்பற்றை ஊட்டிய வீரத்துறவி விவேகானந்தர், தேச விடுதலைக்கு மட்டுமல்லாமல், ஒவ்வோர் இந்தியரின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான விடுதலைக்கும் வித்திட்டவர்.

(சனவரி, 12,
சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள்,
அவர்தம் நினைவாக, ஈரோடு
மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர்
த.ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்
எழுதிய கட்டுரை – நன்றி : தினமணி)



என்றும் நலமுடன் வாழ...

# தெரிந்து கொள்வோம் இரத்தசோகையைப் பற்றி

கொங்குமாமணி பத்மஸ்ரீ **டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர், சென்னை

இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு ஆண்களுக்கு 13 gm/dl, பெண்களுக்கு 12 gm/dl இருக்க வேண்டும். 10 கிராமிற்கு குறைவாக இருந்தால் இரத்த சோகை ஏனப்படும்.

## இரத்த சோகை வரக் காரணங்கள்

- சத்துணவு குறைவு – உதாரணம் : இரும்புச் சத்து, அபோலிக் ஆமிலம், வைட்டமின் பி12
- உடலிலிருந்து இரத்தம் வெளியேறுதல், உதாரணம் : வயிற்றுப் புண், மூலம், வயிறு, பெருங்குடலில் உள்ள கட்டி
- மாத விடாய் அதிகமாக இருத்தால்
- சிறுநீரகம் மற்றும் சிறுநீரகப் பையில் புற்றுநோய்
- குடலில் உள்ள பூச்சுக்கள், உதாரணம் : கொக்கிப் புழு
- சிவப்பு அணுக்கள் உற்பத்தியாவது குறைதல், உதாரணம் : தொற்று நோய், முடக்கு வாதம், புற்றுநோய், தைராய்டு தொல்லை, சிறுநீரகச் செயல் இழப்பு

## அறிகுறிகள்

- சோர்வு, பசியின்மை
- மூச்சு வாங்குதல்
- படபடப்பு
- நாடித் துடிப்பு
- கால்களில் வீக்கம்

### சிகிச்சை முறைகள்

இரத்த சோகை ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முழு உடல் மற்றும் இரத்தப் பரிசோதனைகளை செய்த பின்னரே, இரத்தச் சோகைக்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்கு தக்க சிகிச்சை அளித்தால் பூரண குணம் அடையலாம். உதாரணம் :

. வயிற்றுப் புண் – இண்டாசிட் மாத்திரை

. மூலம் – அறுவை சிகிச்சை

. தைராய்டு தொல்லை – தைராய்டு தொல்லைக்கு மாத்திரை

. புற்றுநோய் – அந்நோயிக்கான சிகிச்சை

. மாத்திரை – இரும்புச் சத்து, அபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 கலந்த மாத்திரை

. இரும்புச் சத்து மாத்திரையை சாப்பிடும் பொழுது, காபி, டீ போன்றவற்றைத் தவிர்க்கலாம். காலையில் காபி, டீ அருந்துவதால் இரவில் இரும்புச் சத்து மாத்திரையை உணவிற்குப் பின்னர் எடுத்துக் கொள்ளலாம்.

. இரும்புச் சத்து மாத்திரையை சாப்பிடும் பொழுது கால்சியம் மாத்திரையை தவிர்ப்பது நல்லது

. இரும்புச் சத்து அடங்கிய மாத்திரையை எடுத்துக கொள்ளும் போது வைட்டமின் சி நிறைந்த உணவுகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ளும் போது உடலில் இரும்புச் சத்தும் நன்கு உறிஞ்சப்படுகிறது. எனவே, இரத்தசோகை உள்ளவர்கள் வைட்டமின் சி அதிகமுள்ள உணவு வகைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். உ.ம்.: ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லிக்காய், கொய்யா மற்றும் பச்சைக் காய்கறிகள்.

. இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகள் : கீரை வகைகள், கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, பீட்ரூட், சுண்டைக்காய், கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், காளிஃபிளவர் இலை, பச்சை பட்டாணி, வாழைப்பூ, சிகப்பு அரிசி , உளுத்தம் பருப்பு, அவல், கோதுமை மாவு, வெல்லம், தேன், பேரீச்சம்பழம், மாதுளை, நாவல் பழம், உலர்ந்த திராட்சை, ராகி, ஈரல், கோழி, இறைச்சி.

## வருந்துகிறோம்



நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினரும் மற்றும் ஈரோடு தலைமை நில அளவர் (ஓய்வு), மாவட்ட நில அளவை அலுவலருமான ப.முத்துசாமி அவர்கள் 27–12–2024 அன்று இயற்கை எய்தினார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.



# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)











**"கொங்கு நாடு இல்லம்"**
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 044 - 4351 0460
Cell : 63839 85919

**"வெள்ளி விழா இல்லம்"**
34, சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
Ph : 044 - 4351 0460
Cell : 63839 85919

**"தீரன் சின்னமலை மாளிகை"**
நெ.72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 044 - 4266 8046
Cell : 93815 45451

சங்கத்தின் ஆடவர், மகளிர் மற்றும்
தீரன் சின்னமலை மாளிகையில்
வாட்டர் டிஸ்பென்சர், யுபிஎஸ் இன்வெட்டர்,
வாஷிங் மெஷின் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
கொங்கு சொந்தங்கள் தங்களுக்கு தெரிந்தவர்கள் மற்றும்
மகன், மகள்களுக்கு தெரியப்படுத்தி மேற்கண்ட மூன்று
விடுதிகளையும் பயன்படுத்தி கொண்டு பயன்பெறுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**E-mail : chennaikongu@gmail.com, konguchennai@yahoo.com**
**www.kongunanbargalsangam.com**
**Ph : 044 - 4351 0460, Cell : 63839 85919**

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 134 | N.தனுஷ்ரீ | முத்தன் | 22-07-1999 விசாகம் | B.Tech., (ECE) | Sound Engineer | கோவை 03.37 am | 90039 27345 95975 31329 |
| 135 | A.S.ஹர்ஷவர்தினி | கண்ணன் | 12-04-1999 அவிட்டம் | BDS, MBA | Doctor | ஈரோடு 06.19 am | 99425 25666 |
| 136 | K.ரம்யா | கண்ணன் | 03-10-1998 புனர்பூசம் | MCA., | Studying | ஈரோடு 08.20 am | 99769 69222 |
| 137 | K.திவ்யவர்ஷினி | முத்தன் | 21-05-1997 விசாகம் | B.Com., MBA., | Artist | கோவை 09.12 am | 98422 20535 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 120 | V.K.பிரபு | கண்ணன் | 02-02-1986 விசாகம் | B.E., MBA., | Software Professional | தருமபுரி 10.30 pm | 98416 75830 |

## திருத்தம்

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 109 | G.நவீன் | செங்குண்ணி | 29-08-1998 விசாகம் | B.E., (Mech) | Samsung India Pvt. Ltd. Associate - MRO | உடுமலைப்பேட்டை 02.44 pm | 93828 26482 72004 18867 |

# மணமகன் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | K.மனோபாரதி |
| பிறந்த தேதி | : | 27-09-1989 |
| பிறந்த நேரம், இடம் | : | 03:15 pm, ஈரோடு |
| நட்சத்திரம் / இராசி | : | மகம் 4 / சிம்மம் |
| தந்தை பெயர் | : | திரு. R.கந்தசாமி (லேட்) |
| தாயார் பெயர் | : | திருமதி K.மாதவி |
| குலம் | : | செம்பொண் |
| உடன் பிறந்தோர் | : | ஒரு அக்கா |
| உயரம் | : | 5.2 feet |
| படிப்பு | : | B.E., M.Sc., (UK) |
| தொழில் | : | Business |
| மாத வருமானம் | : | Rs.10 Lakh per month (Parents) |
| சொத்து மதிப்பு | : | நேரில் |
| உகந்த மணமகன் | : | Equal ratio and Good family |
| ஜாதக குறிப்பு | : | ராகு, கேது |
| தொடர்புக்கு | : | 73975 59230, 94426 17125 |

| | | | |
|---|---|---|---|
| | | | கு |
| | இராசி | | கேது |
| ரா<br>லக் | | | சந் |
| சனி | மா | சு | பு, சூ<br>செ |

| | | | |
|---|---|---|---|
| கே<br>மா | சூ<br>செ | சு | |
| பு<br>கு | நவாம்சம் | | சந்<br>லக் |
| | | | சனி |
| | | | ரா |

# மணமகன் தேவை



ஜாதகர் பெயர் : S.கிருத்திகா

பிறந்த தேதி : 14-07-1995

பிறந்த நேரம், இடம் : 08:29 pm, சேலம்

நட்சத்திரம் / இராசி : அவிட்டம் **2** / மகரம்

தந்தை பெயர் : திரு. V.சரவணன் B.E.,

தாயார் பெயர் : திருமதி A.சாந்தி MA.,B.Ed.,

குலம் : மணியன்

உடன் பிறந்தோர் : ஒரு தங்கை

உயரம் : 5.7 feet

படிப்பு : M.Tech.,

தொழில் : Own Business (TVC Concretes, Readymix Concrete, Bangalore, Chennai, Hyderabad)

மாத வருமானம் : Rs.2 Lakh per month

சொத்து மதிப்பு : Rich & Affluent - Lands, Plots, Residential Flats in Salem & Bangalore. Properties Value - Over call

உகந்த மணமகன் : Good Family, Equal Status

ஜாதக குறிப்பு : சுத்த ஜாதகம்

தொடர்புக்கு : 93538 98910, 93419 00890

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) | கேது | மாந் | சூரி புத சுக் |
| | இராசி | | |
| லக் சந் | | | |
| | குரு(வ) | ராகு | செவ் |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சூரி கேது |
| | நவாம்சம் | | சனி(வ) |
| செவ் புத | | | லக் |
| ராகு | | குரு(வ) | சந் |



**இந்திய அரசியல் சபை நிர்ணய உறுப்பினர்,**

**சுதந்திர இந்தியாவின் முதல்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

**தமிழகத்தின் முதல் சட்டமன்ற உறுப்பினர்**

# கர்மயோகி T.M.காளியண்ணன்

அவர்களின்

## 104வது பிறந்த நாள்

இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக நம் இந்திய அரசியல் சட்டத்தை (Indian Constitution) உருவாக்கிய நம் தேசத் தந்தைகளில் ஒருவர். இந்திய அரசியல் நிர்ணய சபையிலும், சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றத்திலும் மற்றும் தமிழகத்தின் முதல் சட்டமன்றத்திலும் என மாண்புமிக்க முதல் மூன்று சபைகளிலும் உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர்.

கல்லூரி காலத்திலிருந்தே சுதந்திரத்திற்காக பாடுபட்டு இளம் வயதிலேயே சிறை சென்றவர்.

அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, சட்டமேதை டாக்டர் அம்பேத்கர், இரும்பு பெண்மணி இந்திரா காந்தி, கர்மவீரர் காமராஜர் போன்ற தலைவர்களோடு தேசிய அரசியலில் நாட்டுக்காக பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தின் தலைவராக மேற்கு தமிழகத்தில் ஒரே ஆண்டில் 2000க்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்து நமது கல்விக் கண்களைத் திறந்த கல்வித் தந்தை.

டெல்டா விவசாயிகள் பாசனத்திற்கு மட்டுமே என்றிருந்த மேட்டூர் அணை காவிரி நீர் பாசன உரிமையை, மேற்கு தமிழகத்தின் அனைத்து விவசாயிகளுக்கும் காவிரி நீர் பாசன உரிமையை முழுமையாகப் பெற்றுத் தந்த காவேரித் தாயின் பிதாமகன்.

தான் சார்ந்த காங்கிரஸ் இயக்கத்திற்காகவும், கல்வி நிலையங்களுக்காகவும், தாய் நாட்டிற்காகவும் தனது பல ஆயிரம் ஏக்கர் சொத்துக்களை எல்லாம் ஏழைகளுக்கே வழங்கி மகிழ்ந்த கலியுகக் கர்ணன்.

வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழி மற்றும் பெண் கல்வி மேம்பாட்டிற்கு பல உயர்கல்வி

இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் (1949-50)

முதல் பாராளுமன்ற உறுப்பினர் (1950-52)

தமிழக சட்டமன்ற உறுப்பினர் (1952-67)

தமிழக சட்ட மேலவை உறுப்பினர் மற்றும்

எதிர்கட்சி து.தலைவர் (1967-72)

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட

நாட்டாண்மைக் கழகத்தலைவர் (1954-57)

நிலையங்கள், கல்வி வளமும் அறக்கட்டளைகளை தோற்றுவித்தவர். தேசிய சமூகநீதி காவலராக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்க அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர்.

நாட்டின் சுதந்திரத்திற்கு பின்பும் பிரெஞ்ச் (French) காலனியாகவே இருந்த புதுச்சேரி மாநிலத்தை இந்தியாவுடன் இணைக்க அமைக்கப்பட்ட குழுவின் பிரதிநிதியாக சிறப்புடன் செயல்பட்டு சண்டையில்லாமல் சுமூகமாக இணைப்பு உடன்படிக்கையை ஏற்படுத்தியவர்.

கொல்லிமலைக்கு உலகப் புகழ்பெற்ற கொண்டை ஊசி சாலையை 1954 –57 ல் அமைத்தவர்.

மேட்டூர் அணையில் கிழக்கு கரை மற்றும் மேற்கு கரை கால்வாய்கள் அமைத்து சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களுக்கு பாசன வசதியை செய்து கொடுத்தவர்.

மேட்டூர் அணை உபரி நீரை கொண்டு சரபங்கா மற்றும் திருமணிமுத்தாறு கால்வாய் இணைப்பு திட்டத்தை வடிவமைத்து அதை நிறைவேற்ற வேண்டி தன் வாழ்நாள் இறுதி வரை போராடியவர்.

அவரது அரசியல், சமூக, சமுதாய பங்களிப்புகளையும் அவரது கனவை நனவாக்கும் முயற்சியிலும் எங்களுடன் இணைந்து பணியாற்றிட உங்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

## கொங்கு சொந்தங்களுக்கு விடிகின்ற பொழுது எங்கும் கரும்பாய் இனிக்கட்டும் தைத்திருநாள் மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்

